# மணப்பாறை நகராட்சி

**2017 – ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் (26.12.2017) 26 –ஆம் தேதி செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 26.12.2017 | **பொருள் – 1**<br>நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.4294/2016/P3 நாள்.03.03.2016 –ன் படி மணப்பாறை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளை முழுமையாக செயல்படுத்திட ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் 72 துப்புரவு பணியாளர் நியமணம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டதன் பேரில் 2017–18–ம் ஆண்டிற்கான, திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தொழிலாளர் விலைவிபரப்பட்டியல் வரப்பெறாததன் காரணமாக 2016–17 ம் ஆண்டிற்கான விலைவிபரப்பட்டியல் உடன் உத்தேச செலவினம் ரூ.85 லட்சத்திற்கு தனி அலுவலர் அனுமதி தீர்மான எண்.131 நாள் 04.05.2017ல் பெறப்பட்டது.<br>மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்களின் துப்புரவு பணியாளர்களுக்கான 2017–18ம் ஆண்டிற்கான புதிய விலை விகிதம் ந.க.எண். RCJ3/8631/2017 நாள்.29.08.2017ல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்கண்ட திட்டத்திற்கான திருத்திய மதப்பீடு விபரம். | **தீர்மான எண். 279**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| விபரம் | | நாள் ஒன்றுக்கு | |
|---|---|---|---|
| திருச்சிராப்பள்ளி | | நபர் ஒன்றுக்கு | |
| 1. | மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 2017–18 ஆண்டிற்கான பணியாளர் விலை விகிதம் | – | 295.00 |
| 2. | ESI – (4.75%) | – | 14.01 |
| 3. | EPF – (13.36%) | – | 39.41 |
| 4. | தனிநபர் விபத்து காப்பீடு (ரூ. 500/நபர்/வருடம் ) | – | 1.37 |
| 5. | பாதுகாப்பு உபகரணஙகள் மற்றும் சீருடை (ரூ. 5000/நபர்/வருடம் ) | – | 13.70 |
| 6. | நிர்வாக கட்டணம் (10% ) | – | 29.50 |
| | மொத்தம் | – | 392.99 |

| | | |
|---|---|---|
| | எனவே மேற்காணும் விபரப்படியான திருத்திய மதிப்பீட்டிற்கான தொகை 88.28 லட்சம் (ரூ.392.99 X 26 நாட்கள் x72 பணியாட்கள் X 12 மாதஙகள் ) –ற்கான அனுமதியும் நாளிதழ் மற்றும் அரசிதழில் ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை வெளியிட்டு ஒப்பந்தபுள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அ.கு</u>**<br>1. பொது சுகாதார நலன் கருதி அனுமதிக்கலாம்.<br>2. செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்<br>( ந.க. எண். எச்.1 / 74/2015 ) | |
| 26.12.2017 | **பொருள் – 2**<br>மணப்பாறை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு உள்ளிட்ட காய்ச்சல் சம்பந்தமான நோய்கள் தடுக்கும் பொருட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களின் ( க.எண்.1588 / ஜே1 /2015 நாள்.29.10.2015 ) அறிவுரையின் படியும் , நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் நிர்வாக கூட்ட அறிவுரையின் படியும் , துணை இயக்குனர் சுகாதார பணிகள் திருச்சி அவர்களின் அறிவுரையின் படியும் (க.எண்.3145/அ4 / 2014 நாள்.03.07.2014 ) மாவட்ட ஆட்சித்தலைவரின் அறிவுரையின்படியும் அறிஞர் அண்ணா ஆண்கள் சுய உதவிக்குழுவின் மூலம் 20 நபர்கள் கொசுப்புழு உற்பத்தியாகும் இடஙகளை கண்டறிந்து அழித்தல், புகைமருந்து அடித்தல், தேஙகியுள்ள நீரில் டெமிடாஸ் தெளித்தல், பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் மருத்துவ முகாம்களுக்கு உதவியாக இருத்தல் போன்ற பணிகளை தற்காலிக அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இவர்களது பணிக்காலம் 14.01.2018 அன்றுடன் நிறைவடைந்து விட்டதால் மேலும் இரண்டு மாதஙகள் தற்காலிகமாக பணிகளை மேற்கொள்ள நீட்டிப்பு செய்ய வேண்டியுள்ளதால் 13.03.2018 வரை கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2017–18ம் ஆண்டிற்கான தினக்கூலி அடிப்படையில் நாள் ஒன்றுக்கு ரூ.295 தொகைக்கு பணிகள் மேற்கொள்ள இரண்டு மாதஙகளுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,06,800 /– தொகை ஆகும். எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி கொசு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ளவும், பணி உத்திரவு வழஙகவும், கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அ.கு</u>**<br>1. பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழஙகியமையை அங்கீகரிக்கலாம்.<br>2. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்<br>( ந.க. எண். 4562/2014/ எச்.1 ) | **தீர்மான எண்.280 அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 26.12.2017 | **பொருள் – 3**<br>இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் லாரி எண்.TN 45 L 7670 வாகனத்தின் முன்பக்க டயர்கள் மாற்றப்பட்டு 173781 கிலோமீட்டர் ஓடியுள்ளதால் தேய்ந்த நிலையில் இயங்கி வருகிறது. அதனை ரீபட்டன் போடுவதற்கு TVS TREAD (Sundaram Industries Private) LTD புதுக்கோட்டை நிறுவனத்தின்மூலம் பணி மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.7000/–ஐ குடிநீர் நிதியிலிருந்து செலவுசெய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அ.கு</u>**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 281**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 26.12.2017 | **பொருள் – 4**<br>மாவட்ட ஆட்சித்தலைவர் திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் ந.க.எண்.330/செமதொ/2017 நாள்.15.11.2017ல் தெரிவித்துள்ளவாறு திருச்சிராப்பள்ளி சத்திரம் பேருந்து நிலையம் அருகில் உள்ள தூய வளனார் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் நடைபெறும் அரசு பொருட்காட்சிக்கு மணப்பாறை நகராட்சி சார்பாக அரஙகு அமைப்பதற்கு விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ணட வாறு வரப்பெற்றுள்ளது.<br>1. Saai Exhibitiors & Decors, Madurai- 1 - Rs.21240/-<br>2. Padma Enterprises , Chennai-2 – Rs.23600/-<br>3. Art Decors, Chennai–87 – Rs.27140/–<br>என்ற விலை விகிதத்தில் வரப்பெற்றுள்ளது. இதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Saai Exhibitors & Decors Madurai –1 என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழஙகவும் மேற்படி நிறுவனத்திற்கு மேற்படி தொகை ரூ.21420/– வழஙகவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அ.கு:</u>**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.282**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 26.12.2017 | **பொருள் – 5**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் பட்டியல் மாலைமலரின் தொழில் மலரில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பிரசுரம் செய்யப்பட்டதற்கான கட்டணம் ரூபாய் 12,075/– தொகையை பொதுநிதியிலிருந்து மாலைமலர், திருச்சி அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அ.கு:</u>**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.283**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

<table>
<tr>
<td>26.12.2017</td>
<td>பொருள் – 6<br>
மணப்பாறை நகராட்சியில் தட்டச்சர் பணியிடம் 01.08.2013 காலியாக உள்ளது. தினசரி தட்டச்சுபணி, கணினியில் Online மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள் காலதாமதம் மற்றும் சிரமமான சூழ்நிலை ஏற்படுகிறது.<br>
இதனை தவிர்க்கும் பொருட்டு கணினி நிறுவனத்தில் தமிழ் மற்றும் ஆங்கிலம் தட்டச்சு செய்தல் மற்றும் கணினியில் பணி மேற்கொள்ள தெரிந்த நபர் ஒருவரை தற்காலிகமாக தேவைப்படும் காலம் வரை, மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்களால் மேற்கண்ட பணி மேற்கொள்வதற்கான 2016–17–ம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட விலைவிகிதத்தில் தினக்கூலி வழஙக பணி செய்வதற்கும், செலவு தொகையை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அ.கு</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்.284<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>26.12.2017</td>
<td><u>பொருள்–7</u><br>
இந்நகராட்சியில் வருவாய் பிரிவில் போதிய பணியாளர்கள் இல்லாததால் சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் ஆகியவற்றை வசூல் செய்ய சிரமமான சூழ்நிலை ஏற்படுவதால் ஆட்டோ மூலம் விளம்பரம் செய்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த, வாடகை ஆட்டோ மூலம் விளம்பரம் செய்யவும் அதறகாகும் செலவினத்திற்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் பணியின் அவசியம் கருதி விலைப்புள்ளி பெறப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பெயர்</th><th>விலைப்புள்ளியில் கொடுக்கப்பட்டுள்ள தொகை</th></tr>
<tr><td>1</td><td>திரு.பி.குமணன், தீபம் டிராவல்ஸ், 13/195, சபரி நிவாஸ், பொத்தமேட்டுப்பட்டி</td><td>நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.1250/–</td></tr>
<tr><td>2</td><td>கோபிநாதன், 13/B, திரு.வி.க. நகர், செவலூர்</td><td>நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.1400/–</td></tr>
<tr><td>3</td><td>திரு.எஸ்.ராமன், 5, அத்திக்குளம், மணப்பாறை.</td><td>நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.1500/–</td></tr>
</table>
<u>அ.கு</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்த திரு.பி.குமணன், மணப்பாறை விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>
3. டிசம்பர் – 2017 முதல் மார்ச் – 2017 வரை தேவைப்படும் காலஙகளுக்கு பயன்படுத்தி கொள்ள அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண். 285<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

தனி அலுவலர்
மணப்பாறை நகராட்சி